உ
சிவமயம்



# அமரர். வல்லிபுரம் மகேந்திரம்

அவர்களின்


## 31ம் நாள் நினைவு மலர்

29.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 | 30 |
| 05 | 05 |
| 1940 | 2015 |

## அமரர்.வல்லிபுரம் மகேந்திரம்

### திதி நிர்ணயம்

சிந்தை நிறை மன்மதவருட சிறந்தமதி வைகாசி
வந்த திதி வளர்பிறை துவாதசியில் (துதியை) சந்ததி சூழ்
மகேந்திரம் எனும் பேராளன் புவிநீத்து
இறைவனடி இணைந்தார் இனிதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அமைதியாய், இன்பமாய், துணிவாய், வையத்துள்

வாழ்வாங்கு வாழ்ந்து, எம்மை எல்லாம் ஆளாக்கி

நாம் என்றும் இன்பமாய் தரணியில் நல்வாழ்வு

வாழ வழிபல செய்து, எம்மை விட்டு நிரந்தரமாய்

பிரிந்து சிவபதமடைந்த எம் அன்புத் தெய்வம் அமரர்

வல்லிபுரம் மகேந்திரம் அவர்களுக்கு இந் நினைவு

மலர் சமர்ப்பணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

சிவமயம்

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

சலம் பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலைை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரல் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி!

**திருச்சிற்றம்பலம்**

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றை
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

அருணகிரிநாதர்

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகை மெலாம்

**கச்சியப்ப சிவாச்சாரியார்**

**சிவாயநம**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரிதம்

பச்சை பசேலென்ற வயல் வெளியும்
வானுயர்ந்த தென்னந் தோப்புக்களும்
முக்கனிகள் ஒன்றாய்ச் சேர்ந்துநிலங்கிடும்
குறைவிலா பால்சொரியும் எருமைகளும்
நிறைந்த ஊராம் திரியாய் தனிலே
குறைகளில்லாத ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதில்
வல்லிபுரம் செல்லம்மா தம்பதியர்க்காய்
செல்வ மகனாய் வந்து பிறந்தார்
ஊரும் உறவும் குதூகலம் கொள்ளவே
திருநாமம் சூட்டியே அழகுபார்த்தனர்
ஆசையாய் அணைத்தெடுத்தே நிலாச்சோறூட்டி
பெற்றோர் பாசம் பொழிந்துவரும் வேளையிலே
அடுக்கடுக்காய் சகோதரர்கள் வந்துபிறந்தனர்
சிவநாயகம் மனோன்மணி சிவபாதசுந்தரம்
இராஜலெட்சுமி உடன் மாதவராசா புஷ்பராணி
கடைக்குகுட்டியாய் மதனநாயகியும் குறைவிலா
செல்வங்களாய் அன்பு மழைபொழிய உறவாடினர்
பள்ளிப் பருவமும் கூடி வந்திடவே
திரியாய் வித்தியாலயத்தே சேர்ந்துகற்றார்
கல்வியில் நாட்டம் குறைந்திடவே
தந்தைக்குத் துணையாய் கமம்செய்தே
நீள் செல்வம் சேர்த்தே அகமகிழ்ந்தார்
காளைப்பருவமும் கூடி வந்த அப்பொழுதினிலே
களங்கமில்லாத ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தாறில்
கோணாமலை தங்கம்மா தம்பதியர் பெற்ற
செல்வமகளாம் நாகபாக்கியத்தையே
கைத்தலம்பற்றி திருமணம் செய்தார்
கணவனின் குணமறிந்து உற்றார் போற்ற
கண்ணியமாய் மனைவி குடும்பம் நடத்தினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமும் நன்றாய்ப் பெருகிவரவே
குறையில்லா ஆனந்தம் அடைந்து நின்றார்
இல்லறம் என்றும் நல்லறமாகவே
மூத்த மகனாய் ச்சிதானந்தமும்
பின்னவனாக ஸ்ரீதரஆனந்தமும்
நிர்மலானந்தன், நிர்மலா உடன் புவனந்தியும்
கடைக்குட்டியாய் உதயபானுவும்
செல்வ மகளாய் பிறந்து வந்தனர்
மக்களை கல்வியில் உயர்த்திட எண்ணியே

அதிபராகவும், நல்லாசிரியனாகவும்
உறவுகள் போற்ற உயர்த்தியே வைத்தார்
புன்னகையை நல்லணியாக்கியே நாளும்
மௌனமாய் நின்றே தன் பணி செய்தார்
பேச்சிலே நாளும் கருணை பொங்கிட
பேரக் குழந்தைகளோடு எப்போதுமே
மழலை மொழியால் அணைத்தெடுத்தே
அன்புமழை பொழிந்து நின்றார்
அடுக்கடுக்காய் சகோதரர்களை இழந்தே
பெரும் துயரம் அடைந்த போதிலும்
திரியாய் சென்றே சகோதரிகளின் உறவை
கடைசிவரை மறவாமல் இணைத்து நின்றார்
நோயால் சிறிதே துன்பமடைந்தாலும்
இறக்கும் வரையில் உறவினைப் பேணி
பேசிப் பேசியே ஆத்மாவைப் பிரிந்தார்
எறிகதிர் சூரியன் சூடு மறந்திட
பாய்ந்து செல்லும் நதி அமைதியாய் அடங்கிட
உற்றார் உறவுகள் பேரக்குழந்தைகள்
கதறி அழுதிட வைகாசித்திங்கள்
முப்பது தன்னில் சங்கரன் பாதத்தில் சங்கமமானார்

எங்கே சென்று மறைந்து போனீர்
கணவனாய் உம்மை அடைந்தநாள் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையின்றி குறையேது கண்டேன்
எங்கு சென்றாலும் என்னுடன் வந்தே
கூடியிருந்து காத்திருப்பாயே
மின்னல் தோன்றி மறையுமுன்னே

கணவாய் உம்மை அடைந்நாள் முதல்
கவலையின்றி குறையேது கண்டேன்
எங்கு சென்றாலும் என்னுடன் வந்தே
கூடியிருந்து காத்திருப்பாயே
மின்னல் தோன்றி மறையுமுன்னே
எங்கு சென்று மறைந்துபோனீர்
மனைவியை விட்டே மக்களைப் பிரிந்தே
சொல்லாமல் கொள்ளாமல் மறைந்ததேனோ,
காணும் இடமெல்லாம் நினைவுகள் வாட்டிட
கனவாய்ப் புயலாய் எங்கே சென்றீர்
வாழ்க்கைச் சுழற்சியில் புகலிடம் தந்தே
சிறகொடிந்த வாழ்வைத் தந்ததுமேனோ
பேத்திகள் கேட்டிடும் போதிலெல்லாம்
பொய்யைச் சொல்லி ஆற்றிடுவேனே
வாழ்நாள் வந்து கழிந்திடும் போதிலும்
நினைவுகள் கூறி காலம் கழிப்பேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுவரை தேடுகின்றோம்...

கல்வி தந்தே நல்இல்லறம் தந்தே
ஒவ்வொரு நேரத்துளியிலும்
அன்பாய் அணைத்தே ஆறுதல் சொல்வாய்
நண்பனாய் நின்றே பாசம் பொழிவாய்
மாறும் அன்பைப் பொழிந்து மறைந்தாயே
கல்வியில் நல்ல தொழில் காட்டியே
ஏணியாய் இருந்தே எமை ஏற்றிவைத்தீரே
ஊருக்குப் போகும் எண்ணத்திலே
குடைந்து குடைந்து சேதி கேட்பாயே
உயிர் பிரியும் நேரம் வந்த போதே
அருகிருந்து நோக்க காலம் இடம்தரவில்லையே
கட்டிலே இன்றும் உறங்குவதுபோலே
உணர்வால் துடிக்கிறோம் ஐயா.
உந்தன் வருகைக்காய் காத்திருப்போம்

அன்பு மகன்மார்
சச்சிதானந்தம்
ஸ்ரீதரஆனந்தம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளால் தேடுகின்றோம்...

தந்தையாய் உடைமபெற்றநாள் முதல்
நெஞ்சிச் சிறையில் எமைக்காத்தே
பேராதரவு காட்டிய தந்தையே
நொந்து வார்த்தை சொன்னதை அறியோம்
பனிபோலே நல் மனம் காட்டியே
ஆசையாய் வார்த்தைகள் சொல்வாயே
பிள்ளைகளின் பிள்ளைகள் மேலே
கொள்ளை ஆசை காட்டிநிற்பாயே
பிள்ளைகள் அழும் போதெல்லாம்
வார்த்தை கூற முடியாமல் தவிக்கின்றோம்
எமைப் பிரிந்து சென்றதை எண்ணியே
தினம் தினமாய்த் துடிக்கின்றோம்
சென்ற பாதையெங்கும் மலர் தூவி
தெண்டனிட்டே துதிக்கின்றோம்

அன்பு மகள்மார்
நிர்மலா
புவநந்தி
உதயபானு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்விழித்தோம் காணவில்லை

மார்பிலும் தோளிலும்மாய் எமைச்சுமந்தே
ஆசைக் கதைகள் கூறி வைப்பாயே
பாசமாய் எமை இறுக அணைத்தே
அறிவுரைகள் பல சொல்வாயே
பள்ளி முடிந்து நாம் வரும்வேளை
வாசலிலே நின்றே வரவேற்பாயே
கண்மூடி மௌனமாய் துயின்ற வேளை
நெஞ்சம் குமுறி அழுதுநின்றோமே
அம்மப்பா அப்பப்பா என்று அழுகின்றோம்
விரைந்தோடி வரமாட்டீரோ
இறைவன் உம்மை அழைத்தவிதமென்ன
பிறப்பொன்று இருக்குமென்றால்
மீண்டு வந்தே எம்மிடத்தே பிறக்க வேண்டும்

**அன்புப் பேரப்பிள்ளைகள்**

## எங்கு சென்றாய் சகோதரனே...

அடுக்கடுக்காய் உறவை இழந்தபோதும்
ஆசைமுகம் எண்ணி மகிழ்திருந்தோம்
பாசமாய் ஓடியே வந்தே எம்மை
அன்பினால் கட்டி வைத்தாயே
உடலிலே உள்ள துயரமெல்லாம்
பேசிப் பேசியே போக்கி நின்றாயே
சகோதரிகள் நாம் வந்தது கண்டு
உள்ளத்தில் உவகை பொங்கிநின்றாயே
நொந்து ஒரு சொல் சொல்லாதவனே
பஞ்சமாபாதகன் உனைப் பிரித்தானே
எமது பிள்ளைகளை உமது பிள்ளைகளாய்
என்றும் மனதிலே நினைத்திருந்தாயே

**சகோதர சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவைத்தேடுகின்றோம்...

மருமக்களை மக்களாய் நினைத்தாயே
வார்த்தைகளைக் கேட்பதற்காய்
மெளனமாய் என்றும் காத்திருந்தோமோ
பேசும் போதெல்லாம் உங்கள்
நோயை மறந்திருந்தோமே
பெரும் துயர் தாங்கியே நாளும்
முகத்தால் சிரித்தே மகிழ்ந்திருந்தாயே
பொல்லாத காலனவன் உம்மை
விரைந்து அழைத்துச் சென்றானே

அன்பு மருமக்கள்

## அத்தான் எங்கு சென்றீர்

தந்தைக்குத் தந்தையாய் நாளும்
அரவணைத்தே நல்லாசிகள் தந்தீர்
பெயர் சொல்லி அழைக்கும் போதில்
பெருமையாய் என்றும் நினைத்திருந்தோமே
ஊரின் கனவுகளை சுமந்தே
சொல்லாமல் பிரிந்து சென்றதேனோ
செய்வதறியாது துடிக்கின்றோம்
கண்ணீரைச் சிந்தி வடிக்கின்றோம்
காலம்உள்ளவரை காத்திருப்போம்

மச்சான்மார்

## தேற்றம்

முன்செய்த பாவபுண்ணியங்கள் சாருமுறைப்படியே
மண்ணும் உலகில் பிறந்தே பிறப்பரிய மறைமொழியே
பொன்னாக்க வேண்டி மகேந்திரம் அமரபதம் அடைந்தார்
பின்னோக்கிலா மறமென்னாமலிந்தின்பம் பெற்றுய்கவே

கவியாக்கம்
கவிஞர் க.யோகானந்தன்
சம்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்கள் திரியாயை பிறப்பிடமாகவும், சம்பூரை நிரந்தர வதிவிடமாகவும், கட்டைபறிச்சானை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்தவர். இது தவிர 25.04.2006 இல் சம்பூர்கிராமத்தில் இடம் பெற்ற போர்க்கால சூழல் வன்செயல் அனர்த்தத்தால் சம்பூரில் இருந்து இடம் பெயர்ந்து குடும்பத்தினர் சகிதம் மட்டக்களப்பு சென்று அங்கு சுமார் மூன்று வருடங்கள் வாழ்ந்தவர்.

இவருடைய பிறப்பிடக் கிராமமான திரியாய் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டுக்குளப்பற்று பிரதேசமான குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வயல் சூழ் மருத நில தமிழ் கிராமமாகும். இவர் இக்கிராமத்தில் ஐந்தாம் வட்டாரத்தில் இந்து மத வேளாளர் குல வல்லிபுரம் செல்லம்மா தம்பதியினருக்கு 1940.05.17 ஆம் நாள் இரண்டாம் மகனாகப் பிறந்தார். இவருடைய மூத்த சகோதரர் அமரர் சிவநாயகம் ஆவார். இவரது இளைய சகோதரர்கள் அமரர் சிவபாதசுந்தரம், (சின்னக்கிளி) மாதவராசா (நாகராசா) என்போராவர். மனோன்மணி, இராசலெட்சுமி, புஸ்பராணி, அமரர் மதனநாயகி என்போர் இவரது சகோதரிகளாவர்.

திரியாயில் விவசாய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து ஆரம்ப கல்வி கற்ற இவர் விவசாய தொழில் புரிந்து பெற்றோர், உடன் பிறப்புக்களுடன் வாழ்ந்த காலத்தில் இளைஞராக விளங்கிய இவருக்கு திருமணம் செய்து வைப்பதற்கான முயற்சியில் இவரது பெற்றோர், ஈடுபட்டனர் இதன் நிமித்தம் வல்லிபுரம் மகேந்திரம் இவருக்கும் சம்பூரில் வாழ்ந்த இந்து மத வேளாளர் குல கோணாமலை தங்கம்மா தம்பதியினர் மகளான எனது அக்கா நாபாக்கியம் அவர்களுக்கும் பெற்றோர், உற்றார், உறவினர், பெரியோர் நிட்சயித்த படி 1966.06.20 அன்று திருமணம் நடந்தது. மகேந்திரம் அவர்கள் அக்காவை திருமணம் செய்ததால் எனக்கு அமைத்துணரானார். அதேபோல் எனது சகோதரி அமரர் அகிலாண்டநாயகி, எனது சகோதரர்கள் மணிராசா, குமாரநாயகம் முதலானோருக்கும் மைத்துணரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள் மீது மிக்க பற்றும், பாசமும் கொண்டிருந்த எனது மைத்துணர் அவர்களுடனான குடும்ப உறவை வலுப்படுத்தி உற்றார் உறவினர்களுடன் என்றும் உறவைப்பேணி வாழ்ந்து வந்தார். திருமணமாகி இல்லற நல் குடும்ப வாழ்வில் இவர் ஈடுபட்டதனால் இவர் சச்சிதானந்தம், ஶ்ரீதர ஆனந்தம், நிர்மலானந்தன், நிர்மலா, புவநந்தி, உதயபானு முதலான பிள்ளைச் செல்வங்களுக்கு தந்தையானார்.

வயல் சூழ் மருத நிலக் கிராமமான திரியாயில் பிறந்து வளர்ந்ததாலும் வயல் சூழ் மருத நிலக்கிராமமான சம்பூரில் திருமணம் செய்து வாழ்ந்ததாலும் இவர் தமது குலத் தொழிலான நெற்செய்கையில் ஈடுபட்டு வாழ்ந்தார். எனது தந்தையாரான இவரது மாமனார் கணபதிப்பிள்ளை கோணாமலை அவர்களின் தொழில் வழிநடத்தலில் ஈடுபட்ட இவர் சிறந்த விவசாயியாக திகழ்ந்தார். இவர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டாலும், வியாபாரம் உள்ளிட்ட வேறுபல தொழில்களிலும் ஈடுபட்டு வரலானார். மாடுகளைப் பராமரிப்பதிலும், மாட்டு வண்டில் பயன்படுத்துவதிலும், மிக்க ஈடுபாடுடையவராக இவர் விளங்கினார்.

தனது பிள்ளைகளின் கல்வியில் மிக்க அக்கறை காட்டிய இவர் பிள்ளைகள் கல்வி கற்று முன்னேற வழிபல செய்தார். இதனால் இவரது மகன் மார்களான சச்சிதானந்தம் B.A, ஶ்ரீதர ஆனந்தம் B.A, ஆகியோர் அரச தொழிலான ஆசிரியர் நியமனம் பெறும் நிலையேற்றப்பட்டது. சச்சிதானந்தம் தி/மூ/சம்பூர் ஶ்ரீ முருகன் வித்தியாலய அதிபராகப் பணி புரிகின்றார். ஶ்ரீதர ஆனந்தம் தி/தி/கோபாலபுரம் (நிலாவெளி) தமிழ் வித்தியாலயத்தில் சிரேஸ்ட ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

இவர் மனைவி மீது மிக்க பாசம் கொண்டிருந்தார். அதேபோல் பிள்ளைகள் மீதும் மிக்க பாசம் கொண்டிருந்தார். பிள்ளைகள் பராயம் அடைந்துஉரிய வயதை எட்டியதும் இளம் வயதிலேயே பிள்ளைகளுக்கு திருமணம் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு மனைவி, மைத்துணர்கள், உற்றார், உறவின்கள் முதலானோருடன் கலந்து பேசி பிள்ளைகளுக்கு இவர் திருமணம் செய்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இவர் புவனேஸ்வரி ஜெயாழினி என்போரை மருமகள்களாகவும் ம.ரவிச்சந்திரன், பூ.ரமேஸ்வரன், சி.கிருபாகரன் என்போரை மருமகன்களாகவும் பெற்றார். இவர் மருமக்கள் மீது மிக்க பற்றும், பாசமும் கொண்டிருந்தார். பிள்ளைகளின் திருமண பந்தத்தால் இவர் ச.டினோஜிதா (பேராதனை பல்கலைக் கழக மாணவி), ச.சாங்கீத், ச.அபிவர்ணா, ஸ்ரீ.சதுர்ஜனா, ஸ்ரீ.கோபிகா, ர.டர்ஜிகா, ர.கபிலாஜன், ர.துவாரகன், ர.சஞ்சிகா, கி.சோபிதா, கி.கதிர்சனா முதலான பேரப்பிள்ளை செல்வங்களுக்கு அன்பு பேரனானார். இவர் பேரப்பிள்ளைகள் மீது என்றும் அளவில்லா பாசம் கொண்டிருந்தார்.

இவர் வாழ்ந்த நாளில் வாழ்ந்து பின்னர் அமரரான மைத்துணர் கோ.மணிராசா அவர்கள் மீது இவர் மிக்க அன்பு கொண்டிருந்தார். அவருக்கு தொழில் வழிகாட்டியாகவும் விளங்கினார். என்றும் பற்றும் பாசமும் கொண்டிருந்த தனது மகன் நிர்மலானந்தன்இளம் வயதில் இறந்ததால் அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்கள் தன் வாழ்நாளில் மிக்க துயர் கொண்டிருந்தார். இவரது பிரிவு இவரை என்றும் வாட்டியது. இவர் வாழ்ந்த நாளில் மைத்துணர் கோ.குமாரநாயகம் (ஓய்வு பெற்ற அஞ்சலர்) அவர் மனைவி உதயச்சந்திரிகா, அவர் பிள்ளைகள் நிரோசனா, கோபிசாந், சுதர்சனா முதலானோர் மீது மிக்க அன்பு கொண்டிருந்தார். இவர்களுடன் நெருக்கமுடையவராக பழகி என்றும் இவர்களுக்கு பிரியமுடையவராக வாழ்ந்தார்.

அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் ஊராருடனும், நண்பர்களுடனும் நட்புறவு பூண்டு, இனசனம் பேணி, உற்றார் உறவினரை அனுசரித்து குடும்ப உறவை வலுப்படுத்தி பொறுப்பு மிக்க குடும்பத்தலைவராக வாழ்ந்தார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்னும் திருவள்ளுவரின் வாக்கிற்கொப்ப அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்கள் இவ்வுலகில் வாழவேண்டிய நெறிகளுடன் நெடுநாள் வாழ்ந்து மறைந்துள்ளார்.

**மைத்துணர்**
**கோ.திரவியராசா B.A**
**ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி**
**சமதான நீதவான், கலாபூசணம்**

**சம்பூர் - 05**
**மூதூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி

அபரக்கிரியை வழிகாட்டல் ஈமக்கிரியை ஒழுங்கமைப்பு, பஞ்சபுராணம் ஓதல் செயற்பாட்டு உதவி புரிந்தவர்:

ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரும்,
கொட்டியாபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியச் செயலாளரும்,
சைவப்புலவருமான கலாபூசணம்
அ.குகராசா அவர்கள்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

புனித திருக்குறள்

பொருள் : கைம்மாறு பார்க்காது ஒருவர் செய்த நன்மையின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால் அந்த நன்மை கடலினும் மிகப்பெரிதாகும்.

### நன்றி

என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

புனித திருக்குறள்

பொருள் : பெரிய அறங்களை கெடுத்தவர்க்கும் அப்பாவத்தினின்று தப்பிக்கும் வழி உண்டு ஆனால் ஒருவர் செய்த நன்மையை மறந்தவர்க்கு எவ்விதத்திலும் தப்பிக்கும் வழியில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை

| | |
|---|---|
| ✓ அதிகாரபூர்வவ பெயர் | : இலங்கை சனநாயக சோஷலிசக்குடியரசு |
| ✓ தலைநகரம் | : ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் |
| ✓ பெரியநகரம் | : கொழும்பு |
| ✓ அமைவிடம் | : தெற்கு ஆசியா |
| ✓ சிறப்புப் பெயர் | : இந்து சமுத்திரத்தின் முத்து/ நித்திலம் |
| ✓ எல்லைகள் | : அகலாங்கு – 5° 55' – 9° 51' |
| | நெட்டாங்கு – 79° 42' – 81° 52' |
| ✓ நீளம் | : 432 Km (270 மைல்) |
| ✓ அகலம் | : 224 Km (140 மைல்) |
| ✓ பரப்பளவு | : 65,610 $Km^2$ (உலகில் 121 ஆவது) |
| ✓ சுற்றளவு | : 1340 Km |
| ✓ நிலம் | : 64,630 $Km^2$ |
| ✓ நீர் | : 2905 $Km^2$ (4.4 வீதம்) |
| ✓ ஆகக் கூடிய உயரம் | : 2524 மீற்றர் (8281 அடி) (பீதுறுதாலகால) |
| ✓ மக்கள் தொகை | : 21,513,990 (உலகில் 55வது) (July 2010 est) |
| ✓ மொத்த தேசிய உற்பத்தி | : 86.72 பில்லியன் (உலகில் 61வது) |
| ✓ நபர் வரி | : 4300 அமெரிக்க டொலர் (111 வது) |
| ✓ மனித வளர்ச்சி சுட்டெண் | : 0.751 (உலகில் 93 வது) |
| ✓ எழுத்தறிவு வீதம் | : 92.3% |
| ✓ நாணயம் (LKR1) | : இலங்கை ரூபாய் |
| ✓ நேர வலயம் | : G.M.T2 + 05.30 |
| ✓ இணைய குறி | : .lk |
| ✓ தொலைபேசி | : +94 |
| ✓ மின்னழுத்தம் | : 230V |
| ✓ அலையெண் | : 50 Hz |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் தேசியம்

- தேசிய கீதம் : "நமோ நமோ தாயே"
- சிங்களத்தில் இயற்றியவர் : ஆனந்த சமரகோன் (1948 இல்)
- தமிழில் மொழிபெயர்த்தவர் : புலவர்மணி நல்லதம்பிப்பிள்ளை
- ஆங்கில மொழிபெயர்ப்பு : C.W.W.கன்னங்கர
- தேசிய கொடி : வாளேந்திய சிங்கம்

(1950ல் வடிவமைத்தவர் - கேர்ணல் ஒல்கொட்)

- தேசிய சின்னம் : 1972 குடியரசு ஆன பின்னர்

மாபலகம விபுலசார மகா தேரரால் வடிவமைக்கப்பட்டது.

- தேசிய மலர் : நீல அல்லி [3] (1986 பெப்ரவரி 6)
- தேசிய மரம் : நாகமரம் [4] (1986)
- தேசிய பறவை : காட்டுக்கோழி
- தேசிய மிருகம் : மரஅணில்/ யானை
- தேசிய விளையாட்டு : கரப்பந்தாட்டம், எல்லே
- தேசிய புனித மரம் : வெள்ளரசு
- தேசிய உணவு : பால்ச்சோறு (2010 நவம்பர் 17)
- தேச பதா : டி.எஸ்.சேனநாயக்க
- சுந்திர தினம் : பெப்ரவரி 04

சுதந்திரம் (விடுதலை) – 1948 ஐக்கிய இராச்சியத்திடமிருந்து

- குடியரசு தினம்/ தேசிய வீரர்கள் தினம் : மே 22 (1972 முதல்)
- தேசிய வீரர்கள் :

1. டீ.எஸ்.சேனாநாயக்க
2. சேர்.பொன்னம்பலம் இராமநாதன்
3. டீ.பீ.ஜயத்திலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு | 1940 | 05 | 17



உதிர்வு | 2015 | 05 | 30

## அமரர் வல்லிபுரம் மகேந்திரம்

திரியாயைப் பிறப்பிடமாகவும், சம்பூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கட்டைபறிச்சானை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்கள் 2015.05.30 சனி அன்று காலமானார், அன்னார் வல்லிபுரம் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், நாகபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், சம்பூரைச் சேர்ந்த கோணாமலை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சச்சிதானந்தம் (அதிபர் சம்பூர் ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), ஸ்ரீதரானந்தம் (ஆசிரியர் கோபாலபுரம் தமிழ் வித்தியாலயம் நிலாவெளி), அமரர் நிர்மலானந்தன், நிர்மலா, புவனந்தி, உதயபானு ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, ஜெயாழினி, ரவிச்சந்திரன், ரமேஸ்வரன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் சிவநாயகம், மனோன்மணி, அமரர் சிவபாதசுந்தரம், இராஜலெட்சுமி, மாதவராசா, புஷ்பராணி, அமரர் மதனநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், டினோஜிதா, சங்கீத், அபிவர்ணா, சதுர்ஜனா, கோபிகா, டர்ஜிகா, கபிலாஜன், துவாரகன், சஞ்சிகா, சோபிதா, கதிர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் அகிலாண்டநாயகி, திரவியராசா (ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி), அமரர் மணிராசா, குமாரநாயகம் (ஓய்வு பெற்ற அஞ்சலர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2015.06.01 (திங்கள்) அன்று மு.ப 10.00 மணிக்கு கட்டைபறிச்சான் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் சம்பூர் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கட்டைபறிச்சான்,
30.05.2015.

தகவல்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 30.05.2015 அன்று எம்மை விட்டுப்பிரிந்து சிவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வல்லிபுரம் மகேந்திரம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயர், துன்பங்களை பகிர்ந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களை தெரியப்படுத்தியோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், பனர் காட்சிப்படுத்தி ஆழ்ந்த அனுதாபங்களை தெரியப்படுத்தியோருக்கும், நேரகாலத்தையும் இடத்தூரத்தையும் பாராது நேரில் வந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், சம்பூர் இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட பல வகைகளிலும் உதவிகள் நல்கி பணிபுரிந்தோருக்கும், எமது அன்புத் தெய்வத்தின் மறைவு முதல் இற்றை நாள் வரை பல வகைகளிலும் உதவிகள் நல்கியோருக்கும், இன்றைய 31ஆம் நாள் இல்ல அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், உறவுகள்.
கல்லம்பார், கட்டைபறிச்சான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்ததி

மகேந்திரம் + நாகபாக்கியம்

- சச்சிதானந்தம் + புவனேஸ்வரி
  - டினோஜிதா
  - சங்கீத்
  - அபிவர்ணா
- ஸ்ரீதர ஆனந்தம் + ஜெயாழினி
  - சதுர்ஜனா
  - கோபிகா
- (அமரர்) நிர்மலானந்தன்
- நிர்மலா + ரவிச்சந்திரன்
  - டர்ஜிகா
  - கபிலாஜன்
- புவநந்தி + ரமேஸ்வரன்
  - துவாரகன்
  - சஞ்சிகா
- உதயபானு + கிருபாகரன்
  - சோபிதா
  - கதிர்சனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-